**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 346** **நாள்: 28.10.2025**

**மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள், ஆசிய இளையோர் விளையாட்டுப் போட்டியில் மகளிர் கபடி போட்டியில் தங்கம் வென்று சாதனை படைத்த செல்வி கார்த்திகா அவர்களைப் பாராட்டி, மாநகராட்சியின் சார்பில் ரூ.5 இலட்சத்திற்கான காசோலையினை இன்று (28.10.2025) வழங்கிப் பாராட்டினார்.**

மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள், பஹ்ரைனில் நடைபெற்ற ஆசிய இளையோர் விளையாட்டுப் போட்டியில் மகளிர் கபடி போட்டியில் தங்கம் வென்று சாதனை படைத்த இந்திய மகளிர் அணியின் துணை கேப்டனும், பெருநகர சென்னை மாநகராட்சியில் தூய்மைப் பணியாளராக பணிபுரிந்த திருமதி சரண்யா அவர்களின் மகளுமான செல்வி கார்த்திகா அவர்களைப் பாராட்டி, மாநகராட்சியின் சார்பில் ரூ.5 இலட்சத்திற்கான காசோலையினை ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் இன்று (28.10.2025) வழங்கிப் பாராட்டினார்.

பெருநகர சென்னை மாநகராட்சி, சோழிங்கநல்லூர் மண்டலம், கண்ணகி அரசுப்பள்ளியில் 12ஆம் வகுப்பு பயின்று வரும் கண்ணகி நகரைச் சேர்ந்த செல்வி கார்த்திகா (வயது 17), பஹ்ரைனில் நடைபெற்ற ஆசிய இளையோர் மகளிர் கபடி விளையாட்டுப் போட்டியில் இந்திய மகளிர் கபடி அணி இறுதிப்போட்டியில் ஈரானை 75-21 என்ற புள்ளிக்கணக்கில் வென்று தங்கம் பெற்று சாதனை படைத்தது. இந்திய அணியின் துணை கேப்டனாக இருந்து அணி தங்கம் வெல்ல முக்கிய காரணமாக இருந்து உலக அரங்கில் இந்திய நாட்டிற்குப் பெருமை சேர்த்த நமது சென்னையின் கண்ணகி நகரைச் சேர்ந்த செல்வி கார்த்திகா ஆவார். இவரின் அபார ஆட்டத்தால் ஆசிய இளையோர் விளையாட்டுப் போட்டியில் இந்திய மகளிர் கபடி அணி தங்கம் வென்றுள்ளது.

செல்வி கார்த்திகாவின் தாயார் சரண்யா சென்னை மாநகராட்சியின் கோடம்பாக்கம் மண்டலத்தில் 29.10.2020 முதல் 01.01.2024 வரை தூய்மைப் பணியில் பேட்டரியால் இயங்கும் மூன்று சக்கர வாகனத்தின் ஓட்டுநராகப் பணிபுரிந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. பிறகு சொந்தமாக ஆட்டோ வாங்கி தற்போது ஆட்டோ ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறார். செல்வி கார்த்திகாவின் இந்த வளர்ச்சிக்கு அவர்களின் குடும்பத்தினரின் பங்கு அளப்பரியது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செல்வி கார்த்திகாவின் வெற்றியை பாராட்டி அவரை ஊக்குவிக்கும் விதமாக, ரூ.25 இலட்சம் பரிசுத்தொகை வழங்கிப் பாராட்டினார்கள். இதனைத் தொடர்ந்து செல்வி.கார்த்திகாவின் வெற்றியைப் பாராட்டி அவரைச் சிறப்பிக்கும் விதமாகவும், மாண்புமிகு மேயர் அவர்கள் ரூ.5 இலட்சம் பரிசுத் தொகையினை வழங்கி, பொன்னாடை அணிவித்துப் பாராட்டினார்.

இந்நிகழ்ச்சியில், ஆணையாளர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., இணை ஆணையாளர் (சுகாதாரம்) முனைவர் வீ.ப.ஜெயசீலன், இ.ஆ.ப., நிலைக்குழுத் தலைவர் (பொதுசுகாதாரம்) டாக்டர் கோ. சாந்தகுமாரி, கபடி வீராங்கனை செல்வி கார்த்திகாவின் குடும்பத்தினர், தமிழ்நாடு தூய்மைப் பணியாளர் நலவாரிய உறுப்பினர் திரு.ஜி.கே. ராஜன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி.**